


26.07.2024

தலைப்புச் செய்திகள்

1. தேசத்திற்காக உயிர் நீத்தவர்களின் தியாகம் என்றென்றும் போற்றப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நாடாளுமன்ற இரு அவைகளிலும் கார்கில் போரில் இன்னுயிர் ஈந்த வீரர்களின் நினைவாக இன்று மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

3. சர்வதேச நாடுகளுக்கு உயிர்காக்கும் மருந்துகளை விநியோகிக்கும் முன்னணி தேசமாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

4. கர்நாடக அணைகளிலிருந்து ஒருலட்சத்து 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றபடுவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.

5. 33-வது ஒலிம்பிக் போட்டிகள் பாரிசில் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் இன்றிரவு கோலாகலமாக தொடங்குகின்றன

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

கார்கில்

கார்கில் போரில் இந்தியா வெற்றி பெற்ற 25-வது ஆண்டை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி, ட்ராசில் அமைந்துள்ள போர் நினைவுச்சின்னத்தில் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களின் நினைவாக இன்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கும், தேசமே முதன்மை என்ற அவர்தம் உணர்விற்கும் தலை வணங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாதத்தை நமது வீரர்கள் தகர்த்து எறிந்து எதிராளிகளுக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பதை இத்தினம் உணர்த்துவதாக குறிப்பிட்டார்.

அக்னிபாத் திட்டத்தை குறைகூறும் எதிர்கட்சிகளின் செயலுக்கு கண்டனம் தெரிவித்த அவர், நாட்டின் இளையோரை எதிர்கட்சிகள் தவறாக வழிநடத்துவதாக குற்றம் சாட்டினார்.

கட்டமைப்பு வளர்ச்சியுடன் சுற்றுலாவும் மேம்பட்டு வருவதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக ஷின்குன் - லா சுரங்கப்பாதை திட்டத்தை காணொலி மூலம் தொடங்கி வைத்த பிரதமர், இத்திட்டம் லடாக்கின் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

4.1 கிலோ மீட்டர் தொலைவிலான இந்த குகைபாதை லே பகுதிக்கு செல்லும் வகையில் நிமு படும் டார்ச்சா சாலையில் 15 ஆயிரத்து 800 அடி உயரத்தில் கட்டமைக்கப்பட உள்ளது.

இப்பாதை செயல்பாட்டிற்கு வரும் போது உலகின் மிக உயரத்தில் அமைந்த சுரங்கப் பாதையாக இது திகழும் என்பதோடு, ராணுவத்தின் துரித செயல்பாட்டிற்கு வழிகோலும் என எதிர்பார்க்கப் படுகிறது.

1999-ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீரில், கார்கில் பகுதியை ஆக்கிரமிக்க முயற்சி செய்த பாகிஸ்தான் ராணுவத்தை தீரத்துடன் எதிர்கொண்டு நம் படைவீரர்கள் வெற்றிவாகை சூடியதை நினைவுகூறும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

□□□□□□□

கார்கில் தொடர்ச்சி

ட்ராஸ் போர் நினைவுச் சின்னத்தில் ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திரா திவேதி, விமானப்படை தளபதி ஏர் சீப் மார்ஷல் வி.ஆர். சவுத்ரி, கடற்படை தளபதி தினேஷ் கே. திரிபாதி ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்திய ராணுவ வீரர்களின் தன்னிகரற்ற வலிமையும், துணிச்சலும் நாட்டு மக்களுக்கு என்றென்றும் உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் போர் நினைவுச் சின்னத்தில் இன்று அஞ்சலி செலுத்தினார்.

இத்தினத்தை ஒட்டி இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் இந்தியா சுயசார்பு பாரத நாடாக உருவெடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

□□□□□□□

கார்கில் - நாடாளுமன்றம்

நாடாளுமன்ற இரு அவைகளிலும் கார்கில் போரில் இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வீரர்களின் துணிச்சலையும், தியாகத்தையும் போற்றிய மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா போரின் போது ஒப்பற்ற வீரத்தை நம் வீரர்கள் வெளிப்படுத்தியதாக பெருமிதம் தெரிவித்தார்.

மாநிலங்களவை தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் பேசுகையில், மோசமான வானிலையின் மத்தியில் வீரர்கள் துணிச்சலுடன் போரிட்டு வீரர்கள் நம்நாட்டிற்கு வெற்றியை ஈட்டி தந்ததாக புகழாரம் சூட்டினார்.

உயிர்த்தியாகம் செய்த வீரர்களின் நினைவாக இருஅவைகளிலும் சிறிது நேரம் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

□□□□□□□

சென்னை போர் நினைவுச் சின்னத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் ஈடு இணையற்ற துணிச்சலுடன் நாட்டை பாதுகாத்த வீரர்களின் அர்ப்பணிப்பை நினைவு கூறுவோம் என்று தெரிவித்துள்ளார்.

கார்கில் போரில் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்த திருச்சியை சேர்ந்த மேஜர் சரவணனின் நினைவாக திருச்சியில் உள்ள அவரது நினைவு சதுக்கத்தில் தேசிய மாணவர் படையின் குரூப் கமாண்டர் கர்னல் விஜயகுமார் உள்ளிட்டோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

□□□□□□□

ஜே.பி. நட்டா

சர்வதேச நாடுகளுக்கு மருந்துகளை விநியோகிக்கும் தேசமாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர், உலகளவில் மிகவும் ஆற்றல் மிக்க, அதே வேளையில் குறைந்த விலையிலான மருந்துகளை இந்தியா உற்பத்தி செய்வதாக குறிப்பிட்டார்.

புத்துயிர் ஊட்டப்பட்ட மருந்தியல் தொழில்நுட்ப தர மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நாட்டின் மருந்தியல் தொழிற்சாலைகளை வலுப்படுத்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

மருந்துகளின் தரத்தை தீவிரமாக ஆராய்ந்து பரிசோதித்த பின்னரே, அவை ஏற்றுமதி செய்யப்படுவதாக எடுத்துரைத்தார்.

மக்களவை தலைவர் திரு. ஓம்பிர்லா இதுபற்றி பேசுகையில் இந்திய மருந்துகளுக்கு உலக அளவில் தேவைகள் அதிகரித்து உள்ளதாகவும், எனவே மருந்துகளின் தரத்தை மேம்படுத்தினால் மருந்து ஏற்றுமதியில் முன்னோடி நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் கூறினார்.

□□□□□□□

ஜெய்சங்கர்

இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் இந்தோ பசிபிக் தொலைநோக்கு திட்டத்திற்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒருங்கிணைப்பு இன்றியமையாதது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்திருக்கிறார்.

லாவோஸ் தலைநகர் வியன்டியானில் நடைபெறும் ஆசியான் - இந்திய வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், ஆசியான் நாடுகளுடன் அரசியல் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை முன்னேடுத்துச் செல்வதே இந்தியாவின் உயர் முன்னுரிமை என்றார்.

□□□□□□□

சஞ்சய் மல்ஹோத்ரா

வரி செலுத்தும் முறைகளை எளிதாக்க மத்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய வருவாய் துறை செயலர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் இன்று நடைபெற்ற பட்ஜெட்டிற்கு பிந்தைய கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், முதலீடுகள் வளர்ச்சி, இளையோருக்கான வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுங்கம் மற்றும் மறைமுக வரி வாரியத்தின் தலைவர் திரு. சஞ்சய் குமார் பேசுகையில் தேசத்தின் எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கான தொலைநோக்கு பார்வையே பட்ஜெட் என்று குறிப்பிட்டார்.

□□□□□□□

மேட்டூர்

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை காரணமாக கர்நாடக மாநிலம் கபினி கிருஷ்ணசாகர் அணைகளிலிருந்து ஒருலட்சத்து 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றின் நீர்வரத்து பகல் 1 மணி நிலவரப்படி, 84 ஆயிரம் கனஅடியாக அதிகரித்து உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

இதேபோல் மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து இன்று நண்பகலில் 58 ஆயிரத்து 973 கனஅடியாக அதிகரித்து, அணையின் நீர்மட்டம் 93.3 அடியாக உயர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

□□□□□□□

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் புதுதில்லியில் அமைந்துள்ள தமிழ்நாடு இல்ல வளாகத்தில் 257 கோடி ரூபாய் செலவில் விருந்தினர் இல்ல புதிய கட்டிடம், குடியிருப்பு கட்டிடம் போன்றவற்றிற்கான கட்டுமானப் பணிகளை சென்னை தலைமை செயலகத்திலிருந்து இன்று காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

நெடுஞ்சாலை பாலங்களுக்குரிய மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் அடங்கிய 11 தொகுதிகள் கொண்ட புத்தகங்களையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

இதன் மூலம் பாலங்களின் கட்டுமானப் பணிகளில் வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிப்பதற்கான நேரம் வெகுவாக குறையும்.

□□□□□□□

சிவசங்கர்

தமிழகத்தில் பேருந்து பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு மாற்றங்களை போக்குவரத்துத்துறை மேற்கொண்டு வருவதாக இத்துறைக்கான அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் திருச்சி வழியாக கோவை செல்லும் புதிய பேருந்து சேவையை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், புதிய வழித்தடங்கள், நவீன இணையதள சேவை, ஆன்மீக சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் திருச்சி மண்டலத்தில் மகளிர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 32 கோடியே 61 லட்சம் பேர் பேருந்து பயணம் மேற்கொண்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலத்தில் சராசரியாக தினந்தோறும் 2 லட்சத்து 91 ஆயிரம் மகளிர் இலவச பயணம் மேற்கொள்வதாக கூறினார்.

□□□□□□□

உதகை

உதகை தாவரவியல் பூங்காவில் இரண்டாவது சீசன் தொடங்கவிருப்பதை ஒட்டி 5 லட்சம் மலர்செடிகள் நடவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா இன்று தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ்..

□□□□□□□

பனிமயமாதா

தூத்துக்குடி பனிமயமாதா பேராலயத்தின் 442-வது ஆண்டு திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது

□□□□□□□

வானிலை

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நீலகிரி கோவை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் மழைபெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மன்னார் வளைகுடா அதனை ஒட்டிய தென் தமிழகம் மற்றும் குமரி கடலோர பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பால் வரும் 30-ம் தேதிவரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□

ஒலிம்பிக்

33-வது ஒலிம்பிக் போட்டிகள் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளுடன் இன்றிரவு கோலாகலமாக தொடங்குகின்றன

தொடக்கவிழா அணிவகுப்பில் இந்தியாவின் பி.வி.சிந்து, ஷரத்கமல் ஆகியோர் தேசிய கொடியை ஏந்தி செல்கின்றனர்.

ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கப்பட்ட நூற்றாண்டை ஒட்டி தொடக்க விழா மைதானத்தில் இல்லாமல் முதன்முறையாக ஸ்செயின் நதியில் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

94 படகுகளில், 10 ஆயிரத்து 500 வீர வீராங்கணைகள் ஒலிம்பிக் அணிவகுப்பில் பங்கேற்கின்றனர்.

□□□□□□□

கிரிக்கெட்

இலங்கை தம்புலாவில் நடைபெறும் ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவிற்கு எதிராக டாஸ் வென்ற பங்களாதேஷ் முதலில் பேட் செய்கிறது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.